Judicial Form No.53

(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
எஸ்.டி.சி. எண்.186/2020
2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்
**அ.சா. 8 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**
**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | முதல்நிலை காவலர்-2170 |
| பெயர் | - | சுரேஷ்பாபு | வட்டம் | - | |
| த/பெ | - | ஜெயச்சந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | |
| சாதி | - | | | | |

<u>26.07.2023</u>

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் தற்போது மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் வால்பாறை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்தேன். கடந்த 23-2-2020 ம் தேதி நிலைய அலுவலில் உதவி ஆய்வாளர் உதயசூரியன், எழுத்தர் தலைமை காவலர் 1170 முஜீப், பாரா பெண் காவலர் 917 கலைவாணி மற்றும் நானும் பணியில் இருந்தேன்.

2. அன்றைய தினமே காலை 8.00 மணியளவில் வால்பாறை சிறுவர் பூங்காவை சேர்ந்த திரு.வெள்ளைச்சாமி என்பவர் புகார் கொடுக்க காவல் நிலையம் வந்தார். உதவி ஆய்வாளர் உதயசூரியன் புகாரை பெற்று அந்த புகார் சம்பந்தமாக நிலைய குற்ற எண் 51/2020, இதச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக காலை 9.30 மணியளவில் சம்பவம் இடமான வால்பாறை நகராட்சி கறிக்கடை சென்று விசாரித்து காலை 11.35 மணியவில் உதவி ஆய்வாளர் உதயசூரியன் காவல் நிலையம் வந்தார்.

3. வழக்கு எண் 51/2020 -ல் தொடர்புடைய ஆஜர் எதிரியான பிரபு, செந்தில் மற்றும் செந்திலின் மனைவி ராணி ஆகியோரை காவல் நிலையத்தில் வைத்து உதவி ஆய்வாளர் விசாரித்தார். எஸ் ஐ சார் விசாரிக்கம்போதே ஆஜர் எதிரி டக் என்று நீ எஸ்ஐ னா பெரிய புடுங்கியாடா என்று சொல்லி யார் புகார் கொடுத்தாலும் எப்ஐ ஆர் போட்டுவிடுவியாடா

என்று திட்டிவிட்டு காவல் நிலைய வராண்டாவிற்கு வெளியே சென்றுவிட்டார்.

4. பிறகு எஸ்ஐ உதயசூரியன் வராண்டாவிற்கு சென்றபோது ஆஜர் எதிரி உதயசூரியனின் சட்டையை பிடித்து கீழே தள்ளி வலது தோள் பட்டையில் குத்திவிட்டார். கீழே விழுந்தவரை வயிற்றில் மிதித்தார், முகத்திலும் குத்தினார், சத்தம் கேட்டு நான், தலைமை காவலர் 1170 முஜிப், பெண் காவலர் 917 கலைவாணி ஆகியோர்கள் வந்து தள்ளிவிட்டதை தடுத்தோம். தடுக்கும்போது எதிரியான பிரபு ஒருத்தரையாவது தூக்கினால் தான் பிரபுவை பற்றி தெரியும். யூனிபாமில் இருக்கும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன்.

5. நான் எதிரியான பிரபு, செந்திலை பிடிக்கும் போது என்னை தட்டிவிட்டு சென்றபோது காவல் நிலைய கேட்டின் அருகே ஆனைமுடி செல்வகணேஷ், வால்பாறை மணிகண்டன் ஆகியோரும் பிடிக்க முற்படும் போது அவர்களையும் தள்ளிவிட்டு சென்றார்கள். அவர் குத்தியதில் உதவி ஆய்வாளருக்கு தலை சுற்றி உடம்பு முடியாமல் ஆகிவிட்டது. கம்ளைண்ட் கொடுக்க வந்த வெள்ளைச்சாமி, அவருடன் இருந்த பாலாஜி, வேலாயுதம் உதவியுடன் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம்.

6. சம்பவம் தொடர்பாக உதவி ஆய்வாளர் உதயசூரியன் புகாரின் பேரில் வால்பாறை சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன் அவர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்டது. 23.02.2020 அன்று 13.30 மணியளவில் ஆய்வாளர் வழக்கு தொடர்பாக சம்பவயிடம் வந்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் நடந்த போது காலை 08.00 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். அன்றைக்கு வீட்டுக்கு போகவில்லை. அடுத்த நாள் தான் சென்றேன். அன்று ரோல்கால் நடந்தது உதயசூரியன் தான் செய்தார். அவருடன் சேர்ந்து நாலு பேருதான் இருந்தோம். அவர்கள் உதயசூரியன், பெண் காவலர் கலைவாணி, தலைமை காவலர் முஜிப் மற்றும் நான். ரோல்கால் 07.00 – 08.00 மணிக்கு நடந்தது. நான் 08.00 மணிக்கு பணிக்கு வந்ததால் ரோல்காலில் கலந்து கொண்டிருக்க வாய்பில்லை என்றால் அப்படி இல்லை கலந்து கொண்டேன். காவல் நிலையத்தில் தான் ரோல்கால் நடந்தது.

2. வெள்ளைச்சாமியுடன் யார் யார் புகார் கொடுக்க வந்தார்கள் என்றால் வந்தபோது வெள்ளைச்சாமி மட்டும் வந்தார். வெள்ளைச்சாமி எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் எத்தனை மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 08.00 மணிக்கு புகார்

கொடுத்தார் எத்தனை மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று தெரியாது. சம்பவயிடத்திற்கு உதவி ஆய்வாளருடன் காலை 09.30 மணிக்கு யார் யார் சென்றார்கள் என்றால் எஸ்.ஐ சார் மட்டும் தான் சென்றார். அவர் எப்படி போனார் என்று தெரியாது. சம்பயிடத்துக்கு போனார் என்று சொல்லிவிட்டு போனாரா என்றால் இல்லை. அவருடன் யார் யார் திரும்பி வந்தார் என்றால் அவர் மட்டும் தான் 11.35 மணிக்கு வந்தார்.

3. 09.35 மணிக்கு சென்று 11.35 மணிக்கு வந்தார் என்றால் சரிதான். சம்பவம் அன்று எனக்கு நிலைய பணி. 28.12.2018-ல் வால்பாறை காவல் நிலையத்திற்கு வந்தேன். நான் வந்த சமயத்தில் காவல் நிலையத்தில் கேமாரா பொருத்தப்பட்டுள்ளது. காவல் நிலைய நடவடிக்கைக்காக அவ்வாறு பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் கேமரா வேலை செய்தது.

3. எதிரி தள்ளுவது போன்ற காட்சியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கேமராவில் தேதி நேரம் வரும் என்றால் சரிதான். செந்திலும், பிரபு-வும் தள்ளிவிட்டதாக சொல்கிறேனே செந்திலை இந்த வழக்கில் சேர்த்துள்ளோமா என்றால் பிரபு மட்டும் தான் தள்ளியதாக சொன்னேன். பார்வை மகஜர் வரைபடம் என் முன்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆய்வாளர் தான் தயார் செய்தார்.

4. பார்வை மகஜரிலுள்ள விவரம் தெரிந்து தான் கையெழுத்துப் போட்டேன் என்றால் சரிதான். சம்பவயிடம் நடந்தயிடத்திற்கும், உதவி ஆய்வாளர் இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 அடி இருக்கும். கழிவுநீர் தொட்டிக்கும் சம்பவயிடத்திற்கும் இடையே சுமார் 10 அடி இருக்கும். சம்பவம் நடந்த இடத்தில் கழிவுநீர் தொட்டி எந்த திசையில் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் கொடி கம்பம் எந்த திசையில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் இருந்து அண்ணா திடல் சுமார் 100 மீட்டரில் உள்ளது.

5. காவல் நிலையத்திலிருந்து கானாரீஸ் ஸ்டுடியோ சுமார் 30 அடி துாரத்தில் உள்ளது. சம்பவம் நடந்தது வால்பாறை டவுணுக்குள் என்றால் காவல் நிலையம் டவுணுக்குள் தான் உள்ளது. பழைய வால்பாறை 9 கிலோ மீட்டரில் உள்ளது. PS என்றால் போலீஸ் ஸ்டேஷன் என்பது சரிதான். பழைய வால்பாறையில் ஏதாவது காவல் நிலையம் உள்ளதா என்றால் பழைய வால்பாறை 9 கிலோ மீட்டரில் உள்ளது. தற்போது உள்ள காவல் நிலையத்திற்கு வடக்கு பக்கதில் பழைய காவல் நிலையம் இருந்தது.

6. நான் சொல்லுவது போல் என் முன்னால் பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் எனது மேல் அதிகாரி தயார் செய்த வரைபடம்,பார்வை மகஜரில் அவர் கேட்டுக் கொண்டதின் பேரில் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல.

நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடவில்லை என்றாலும் எனது மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதின் பேரில் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

District Munsif cum Judicial Magistrate, Valparai
(ஒப்பம்)திரு.ரெ.செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.